
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1247

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# பொய்ப்பெட்டி

**கோவி.லெனின்**

117

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

## விரக்தியின் வெளிப்பாடே அவதூறுக் கூச்சல்!



***என்னதான் ஆச்சு வைகோவுக்கு? கடைசி வரை ஸ்டாலினுடன் நிற்பேன் என்று கலைஞருக்கு உத்தரவாதம் கொடுத்ததாகச் சொன்னவர், புதுக்கூட்டணியில் சேர்ந்ததும் இத்தனை ஆண்டுக்காலம் சேர்ந்திருந்த தி.மு.க. மீது புழுதிவாரி இறைக்கிறாரே?***

ஒரு தலைவருக்குத் தேவை அறிவுபூர்வமான செயல்பாடு, உணர்ச்சிபூர்வமான முடிவுகளல்ல. வைகோ வெறும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பிரமுகர்தானே தவிர, அறிவார்ந்த முடிவெடுக்கும் தலைவராகத் தன்னை வெளிப்படுத்தியதே இல்லை. ‘கலைஞர் தன் மகன் மு.க.ஸ்டாலினுக்கு முக்கியத்துவம் தருகிறார்’ என்று சொல்லி, தி.மு.க.வைப் பிளக்க நினைத்தவர், வைகோ. அதிலும், தன்னை மூன்று முறை ராஜ்யசபா எம்.பி.யாக்கிய கலைஞரையே கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, தி.மு.க.வைச் சொந்தம் கொண்டாட நினைத்தவர். அவருடைய ம.தி.மு.க.வின் இன்றைய நிலை என்ன? ஒட்டுமொத்தமாகத் தன் மகனின் விருப்பத்திற்காகவே மிச்சமிருக்கும் கட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார். இதில் தி.மு.க. மீது பழி சொல்ல அவருக்கு கொஞ்சமாவது அருகதை இருக்கிறதா? ‘பொடா’ சட்டத்தில் தன்னை 500 நாட்களுக்கு மேல் சிறையில் அடைத்த ஜெயலலிதாவிடமே தன் கட்சியைப் பேரம் பேசியவர், வைகோ.

அரசியலில் அவருக்கு எந்தக் காலத்திலும் உறுதியான நிலைப்பாடு கிடையாது. பேச்சாற்றல், வரலாற்றுத் தரவுகள், இலக்கிய ஆர்வம் இவற்றைக்கொண்டு காலம் தள்ளும் மேக்கப் போடாத நடிகர் அவர். அதனால், ஒரு நடிகர் முதலமைச்சரானதும் வைகோ அவரது ரசிகராகிவிட்டார். தன்னுடைய 30 ஆண்டுக்கால நாடாளுமன்ற அனுபவங்களின் தொகுப்பு நூல் வெளியீட்டுக்கு, புத்தகங்களைப் புரட்டிப் பார்க்காத, சட்டமன்ற மரபுகளையே அவமானப்படுத்திய விஜய்யை அழைத்திருக்கிறார். வைகோவின் 30 ஆண்டுக்கால நாடாளுமன்ற அனுபவத்தில், 13 மாதங்கள் மட்டுமே அ.தி.மு.க. கூட்டணியின் தயவில் அவர் வெற்றிபெற்ற காலமாகும். மக்களவையில் அவருக்கு மீதமுள்ள 5 ஆண்டுகள் அனுபவம் என்பது, தி.மு.க. கூட்டணியின் தயவில் பெற்ற வெற்றிதான்.

மாநிலங்களவையைப் பொறுத்தவரை வைகோவை மூன்று முறை எம்.பி.யாக்கியவர் கலைஞர். அதன் பின் ஒரு முறை அவரை எம்.பி.யாக்கியவர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள். எனவே, 24 ஆண்டுக்கால மாநிலங்களவை அனுபவமும் 5 ஆண்டுகள் மக்களவை அனுபவமும் என 30 ஆண்டுகளில் 29 ஆண்டுகள் அவர் தி.மு.க.வால்தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். ஆனால், அந்த அனுபவங்கள் தொடர்பான புத்தகத் தொகுப்பை, பா.ஜ.க.வின் குடியரசு துணைத் தலைவரையும், நடிகர் விஜய்யையும் வைத்து வெளியிடுகிறார். வைகோவைப் போல துரோகத்தனம் செய்யும் ஒருவரை, அரசியல் உலகம் கண்டதில்லை.

மகனதிகாரத்தில் மாட்டிக்கொண்ட தலைவராக அவர் இருப்பதால்தான், சட்டமன்றத் தேர்தலில் ம.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற அவரது கட்சியின் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் பதவி விலக மறுத்து, வைகோவின் பேர அரசியலை அம்பலப்படுத்தி விட்டார்கள். ‘சரக்கு’ இல்லாத கட்சியை ‘விலை’க்கு வாங்க ஆளுங்கட்சி ஆசைப்படுமா? அதனால்தான், விலையில்லாத இணைப்பாக த.வெ.க.வுடன் சேரவேண்டிய சூழல் வைகோவுக்கு ஏற்பட்டுவிட்டது. அந்த விரக்தியின் வெளிப்பாடுதான், தி.மு.க.வுக்கு எதிரான அவரது அவதூறுக் கூச்சல்.

**...வினா தொடரும்.**

## எண்ணற்ற கேள்விகள்... யார் பதில் சொல்வது?

தமிழ்நாட்டில் அரசியல் குழப்பங்களை நிகழ்த்திக்கொண்டிருக்கும் த.வெ.க.விடம் கேட்பதற்கு ஆயிரம் கேள்விகள் இருக்க, தி.மு.க.- அ.தி.மு.க. ஆட்சியமைக்க முயன்றார்களா? என்கிற கேள்வியை வைத்து, கருத்துருவாக்கம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சமூக வலைதளங்களில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இதுதொடர்பாக, பத்திரிகையாளர் தே.சு.கவுதமன் முகநூலில் வைத்துள்ள விமர்சனம் இது.

“தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் ஆட்சியமைக்க முயன்றார்களா? என்ற கேள்வியை வைத்தே தி.மு.க. (முன்னாள்) கூட்டணியினரிடம் தொடர்ந்து கேள்விகளைக் கேட்டுவருகிறார்கள். சமீபத்தில், ஐ.யூ.எம்.எல். தலைவரிடம் இதே கேள்வியைக் கேட்டு, பதிலை வாங்கி, ‘பிக் பிரேக்கிங்’ என்று வெளியிடுகிறார்கள். அதே ஊடகங்களுக்கு லீமா ரோஸ் என்பவரின் அரசியல் குறித்து தெரியுமா? லீமா ரோஸ் என்பவர் ஐ.ஜே.கே. கட்சிப்பொறுப்பில்தான் இருந்தார். அந்தக் கட்சியின் ஊடகம்தான் அந்தத் தனியார் தொலைக்காட்சி.

இந்த லீமா ரோஸ், லாட்டரி அதிபர் மார்ட்டினின் மனைவி என்பது அனைவரும் அறிந்ததே. மார்ட்டின் மீது ஆயிரக்கணக்கான கோடி மதிப்பிலான முறைகேடு வழக்குகள் இருப்பதும், ரெய்டுகள் நடத்தப்பட்டதையும் அறிவோம்... (சிக்கிம் அரசுக்கு சுமார் ரூ.910 கோடி முதல் ரூ.1,000 கோடி வரை இழப்பு ஏற்படுத்தியதாக சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை ஆகியவை வழக்குகளைப் பதிவு செய்து விசாரித்துவருகின்றன). இந்த லீமா ரோஸ், திடீரென ஐ.ஜே.கே. கட்சியிலிருந்து விலகுகிறார். அடுத்த நாளே அ.தி.மு.க.வில் ஐக்கியமாகிறார்... சூட்டோடு சூடாக அவருக்கு அ.தி.மு.க.வில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படுகிறது. லால்குடியில் லீமா ரோஸ் களமிறக்கப்பட்டு, வெற்றியும் பெற்றார். அடுத்து, அ.தி.மு.க.வில் பத்திரிகையாளர்களுக்குப் பதிலளிக்கும் அளவுக்கு முக்கியஸ்தராகக் காட்டிக்கொண்டார்.

அ.தி.மு.க.வில் எடப்பாடியை எதிர்த்தவர்களெல்லாம் த.வெ.க.வில் ஐக்கியமானார்கள். இப்படி, அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை, த.வெ.க.வுக்கு சப்ளை செய்வதன் பின்னணியிலிருக்கும் கூட்டுச்சதி என்ன? இதையெல்லாம் கண்டும் காணாமல், பி.ஜே.பி. மவுனித்திருப்பதன் மர்மம் என்ன? இதுகுறித்து, ‘அந்த தொலைக்காட்சி’ லீமா ரோஸிடம் பேட்டி எடுத்திருக்குமா? ஆக, தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கு எதிராகத் திட்டமிட்ட கருத்துருவாக்கம் செய்கிறார்கள்.

இதுவரை 6 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் த.வெ.க.வால் வாங்கப்பட்டது குறித்து, எந்தக் கேள்வியும் இல்லை இப்போது, ‘த.வெ.க. ஆட்சியைக் கவிழ்க்க, தி.மு.க. சதி, தி.மு.க. பேரம்’ என்ற கருத்தை உருவாக்கி பரப்புகிறார்கள்! த.வெ.க. செய்யும் நெரேட்டிவ், பி.ஜே.பி.யைவிட வேகமாக இருக்கிறது! ஏற்கெனவே, தி.மு.க. கூட்டணி கட்சிகள் ஆதரிக்கும் சூழலில், அ.தி.மு.க.வை உடைக்கும் அவசியம் என்ன? இதுகுறித்தெல்லாம் சமஸ்தானங்களுக்குக் கேள்வி எழுப்ப உரிமை மறுக்கப்படுவது ஏன்?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



த.தமிழ்க்கொடி



### புறநானூற்றுத் தாய்!

1977-ஆம் ஆண்டு, இந்திரா காந்தி அவர்களுக்கு கருப்புக்கொடி காட்டிய போராட்டத்தில் கைதாகி, 42 நாட்கள் சிறையிலிருந்தேன். விடுதலை பெற்றதும், தலைவர் கலைஞர் அவர்களை என் தாயார் அந்தோணி அம்மாள் அவர்களுடன் சென்று சந்தித்து, வாழ்த்துப் பெற்றேன். அப்போது, என் தாயாரைப் பார்த்து, ‘புதிய புறநானூற்றுத் தாய்’ என்று தலைவர் புகழ்ந்துரைத்தது பெருமையாக இருந்தது. என் வாழ்நாளில் மறக்க முடியாத தருணம்.

**– இராயபுரம் த.தமிழ்க்கொடி, எம்மார் குடியிருப்பு, தண்டையார்பேட்டை, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வருக

### பிற்படுத்தப்பட்டோருக்குத் தனி இட ஒதுக்கீடு!

1989-ஆம் ஆண்டு கலைஞர் அரசு பொறுப்பேற்றதும், மார்ச் மாதத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவாக, ‘மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சீர்மரபினருக்கும் 20% தனி இட ஒதுக்கீடு செய்யப்படும்’ என்று அறிவிக்கப்பட்டது. அந்த முடிவையொட்டி, சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஏற்கெனவே இந்த இட ஒதுக்கீடு உரிமைப்போரில் பலியாகிவிட்ட 30 பேர்களின் குடும்பங்களுக்குத் தலா 3 இலட்ச ரூபாயும், மாதாந்திர ஓய்வூதியமாக, தலா 3000 ரூபாயும் வழங்கப்படும் என அறிவித்து நடைமுறைப் படுத்தினார் கலைஞர்.




Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900